# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 3rd Term Examination - 2022

FWC

பரதநாட்டியம்

**Dance**

**Three Hours** | **Gr -12 (2022)** | **53** | **T** | **I,II**

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. "அம்மையே அப்பா ஒப்பிலா மாணியே" என போற்றப்படும் இறைவன்
    1) சிவபெருமான் 2) ஷண்முகன் 3) விநாயகர் 4) கிருஷ்ணர் 5) இந்திரன்

02. பஞ்சஜாதி ததிங்கிணதொம் வரிசையில் ஆதி தாளத்தில் ; ; ; ; ; , தத், தீங்கி/ணதொம்த த,தீங் கிண/தொம் தத்,தீங்கிணதொம் //
    1) திஸ்ரம் 2) கண்டம் 3) மிஸ்ரம் 4) சதுஸ்ரம் 5) சங்கீர்ணம்

03. நவஸந்தி நாட்டியம் அல்லாதது
    1) புஜங்க லலிதம் 2) சந்தியாநிருத்தம் 3) தண்டபாதம்
    4) குஞ்சிதம் 5) தலபுஷ்பபுடம்

04. தெலுங்கு பிரபந்த வகைப் பாடல்கள் எழுந்த காலப்பகுதி
    1) நாயக்கர் காலம் 2) விஜயநகர காலம் 3) சோழர்காலம்
    4) ஆங்கிலேயர் காலம் 5) பல்லவர் காலம்

05. "நாடகமாக ஆடி மடவார்கள் பாடும் நறையூர்" என பாடியவர்
    1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர்
    4) மணிவாசகர் 5) பெரியாழ்வார்

06. தமக்கு நேர்ந்த துன்பங்களில் இருந்து விடுபடுவதற்காக முல்லை நில மக்களால் திருமாலை வேண்டி ஆடப்படும் கூத்து
    1) குன்றக்குரவை 2) ஆய்ச்சியர் குரவை 3) வேட்டுவவரி
    4) குடக்கூத்து 5) நாட்டுக்கூத்து

07. கொட்டாங்கரை அரசனால் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிருஷ்ண ஆட்டத்திற்கு பதிலாக எழுதி நடிக்கப்பட்ட ஆட்டம்
    1) ஹனுமனாட்டம் 2) இராமனாட்டம் 3) தப்பாட்டம்
    4) மயிலாட்டம் 5) கூடியாட்டம்

08. ரஸ உணர்வை அதிகரிக்கச் செய்வது
    1) உத்தீபன விபாவம் 2) அனுபவம் 3) விபாவம்
    4) ஆலம்பன விபாவம் 5) வியபிசாரிபாவம்

09. பூமாலைகள் முதலிய அலங்காரப் பொருட்களை தயாரிப்பதில் வல்லமை பெற்றவள்

1) சேடி 2) சகி 3) தாத்ரேயி 4) சில்பினி 5) இலிங்கினி

10. பரதக்கலை மறுமலர்ச்சியின் தந்தை என போற்றப்படுபவர்

1) வழுவூர் இராமையாப்பிள்ளை 2) மீனாட்சி சுந்தரம்பிள்ளை
3) சுப்பராய நட்டுவனார் 4) அருணாசலநட்டுவனார்
5) கிருஷ்ணையர்

11. பெருமூச்சு விடுதல், பேசாதிருத்தல், கண்ணீர் விடுதல், பிரம்மித்தல் போன்ற செய்கையைக் கொண்ட நாயகி

1) கண்டிதா 2) அபிசாரிகா 3) விப்ரலப்தா
4) கலகாந்தரிதா 5) ஸ்வாதீனபதிகா

12. "சங்கீத சுரபூஷனி" எனும் நூலின் ஆசிரியர்

1) பரதர் 2) நந்திகேஸ்வரர் 3) அருணாசல நட்டுவனார்
4) பத்மா சுப்பிரமணியம் 5) கபிலவாத்ஸாயன்

13. அபிநயதர்ப்பணம் எனும் நூலை தமிழில் மொழி பெயர்த்தவர்

1) உ.வே.சாமிநாதையர், வீரராகவன் 2) ஶ்ரீராமதேசிகன், வீரராகவன்
3) ஆனந்தகுமாரசாமி, நந்திகேஸ்வரர் 4) ஆனந்தகுமாரசாமி, உ.வே.சாமிநாதையர்
5) நந்திகேஸ்வரர், ஶ்ரீராமதேசிகன்

14. பதவர்ணங்களில் தீர்மானங்கள் முடிவடைந்ததும் இடம்பெறுவது

1) கோர்வை 2) சாகித்தியம் 3) அறுதி 4) அடவு 5) ஜதி

15. ஆலய வழிபாட்டில் "திருத்தியோபசாரம்" என அழைக்கப்படுவது

1) தீபாராதனை 2) பண்ணோடுபாடுதல் 3) நடனம் ஆடுதல்
4) சுவாமி புறப்பாடு 5) நாதஸ்வரம் வாசித்தல்

16. கதகளி ஆடலில் இராவணனை குறிப்பிடப் பயன்படுத்தப்படும் வேஷம்

1) தாடி 2) மினுக்கு 3) கரி 4) வெள்ளை 5) கத்தி

17. சிருங்கார ரசத்தின் கடவுள்

1) பிரம்மா 2) ருத்திரன் 3) விஷ்ணு 4) இந்திரன் 5) எமன்

18. சுந்தரி க்ரீவா அதிகம் பயன்படுத்தப்படும் நடனம்

1) பரதநாட்டியம 2) கதக் 3) ஒடிசி 4) மணிப்புரி 5) மோகினியாட்டம்

19. உலக நடன தினம் கொண்டாடப்படும் தினம்

1) தை 1 ஆந் திகதி 2) மாசி 4 ஆந் திகதி 3) ஆவணி 15 ஆந் திகதி
4) சித்திரை 29 ஆந் திகதி 5) ஆடி 24 ஆந் திகதி

20. தான வீரனுக்கு மிகவும் பொருத்தமானவர்

1) இராவணன் 2) கர்ணன் 3) கிருஷ்ணன் 4) விபீஷணன் 5) அரிச்சந்திரன்

(20x1=20புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

*01. 1)* நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

*2)* நீர் கற்ற பதவர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்புச் செய்தவர். நாயகன், நாயகி ஆகியோரைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

*3)* வர்ணத்தின் இலட்சணத்தைத் தருக *(4 புள்ளிகள்)*

*4)* திரிகாலத்தீர்மானத்தினை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. *(10 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*02.* "தரண" என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்திரிய நடனத்தை பின்வரும் அடிப்படைகளில் விளக்குக.

i) தோற்றம் *(4 புள்ளிகள்)*

ii) வளர்ச்சி *(4 புள்ளிகள்)*

iii) இசை, இசைக்கருவிகள் *(3 புள்ளிகள்)*

iv) ஆடல் முறை *(5 புள்ளிகள்)*

v) ஆடை, அணிகலன், ஒப்பனை *(4 புள்ளிகள்)*

*03.* "ஆலயங்களே நடனக்கலையின் காப்பகம்" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. *(20 புள்ளிகள்)*

*04.* சங்கமருவிய காலத்தில் ஆடற்கலை பற்றி விளக்குக. *(20 புள்ளிகள்)*

*05.* சிறுகுறிப்பு எழுதுக.

*1)* சிருங்கார ரஸம் *2)* தலைக்கோலி *3)* ஸாத்விகா அபிநயம் *4)* யதி

*(20 புள்ளிகள்)*

*06.* அஷ்டவித நாயகிகளையும் குறிப்பிட்டு விளக்குக.

*(20 புள்ளிகள்)*